# சைவசித்தாந்த சமூகமயப்படுத்தலில் பண்டிதர் மு.கந்தையாவின் வகிபங்கு

கு.றஜீபன்[1], ச.முகுந்தன்[2]


**ஆய்வுச்சுருக்கம்:**

*பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவியல் மாற்றங்கள் சமயத்துறையிலும் தாக்கத்தினைச் செலுத்தின. அச்சியந்திரத்தின் வருகை சமயக் கருத்தியல்களை சமூகத்தினை நோக்கிக் கொண்டு செல்ல வழிவகுத்தது. சைவசமயத்தின் அறிவார்ந்த தத்துவமான சைவசித்தாந்தத்தினை சமூகமயப்படுத்தல் பணியும் இந்த நூற்றாண்டிலிருந்தே ஆரம்பமாகின்றது. இந்தப் பெரும்பணியினை காலத்திற்குக் காலம் பல்வேறு அறிஞர்கள் பல பரிமாணங்களில் ஆற்றி வந்திருக்கின்றார்கள். இத்தகைய அறிஞர்களில் பண்டிதர் மு.கந்தையாவின் பணியினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆதீனங்களிலும் அறிஞர்கள் சபையிலும் மட்டுமே இருந்த சைவசித்தாந்தத்தினை சாதாரண மக்களிடம் கொண்டு சென்ற அறிஞர்களில் மு.கந்தையா முக்கிய இடத்தினைப் பெறுகின்றார். மெய்கண்டசாத்திரங்களுக்கான உரைகளை வரைவதையோ அந்த உரைகளுக்கு விளக்கங்களை மட்டும் அளிப்பதையோ தனது குறிக்கோளாகக் கொள்ளாமல் மெய்கண்டசாத்திரங்கள் கூறும் தத்துவக்கருத்துக்களை எளிமைப்படுத்தி மக்களுக்கு எளிதில் விளங்கக் கூடியவகையில் கட்டுரைகளாகவும், நூன்முயற்சிகளாகவும், பொருள்பிரித்தறியக்கூடிய பிரபந்தங்கள், காவியங்கள் போன்ற இலக்கியங்கள் மூலமாகவும் சைவசித்தாந்தக் கருத்தினை மக்கள் மத்தியில் கொண்டு சென்றிருக்கின்றார். அத்துடன் அச்சு வடிவங்களுக்கூடாக மட்டுமன்றி சமயப்பிரசங்கம், கண்டனமரபு என்பவற்றின் மூலமாகவும், தனது வாழ்வியலினூடாகவும் சைவசித்தாந்தத்தினை ஒரு மக்கள் தத்துவமாக முன்கொண்டு சென்றிருக்கின்றார். மக்களது வாழ்வியலுக்கும் சைவசித்தாந்தத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை ஆய்வுகளின்வழி நிறுவியுள்ளார். அத்துடன் மக்களது வழிபாட்டிலும், சடங்குகள், சமயக்கிரியைகள் போன்றவற்றிலும் சைவசித்தாந்தம் இழையோடியுள்ளதை தனது ஆழ்ந்த புலமைச்செயற்பாடுகளினூடாக வெளிக்கொண்டு வந்துள்ளார். இதற்கமைய விபரண ஆய்வுமுறையில் இவரது பணிகள் மதிப்பிடப்படுகின்றன. மேலும் சமகாலச் சைவசித்தாந்தப் பேரறிஞர்களில் பண்டிதர் மு.கந்தையா அவர்களின் வகிபங்கு எத்தகையது என்பதை ஒப்பீட்டு நோக்கிலும் இக்கட்டுரை ஆராய்கின்றது.*


**திறவுச்சொற்கள்:** பண்டிதர் மு.கந்தையா, சமூகமயப்படுத்தல், சைவசித்தாந்த மரபு, ஈழத்தில் சைவசித்தாந்தம், சமயப்பிரசங்கம்


[1] *உயர்பட்டபடிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*rajeepan.k@gmail.com*
[2] *இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*smuhunthan@univ.jfn.ac.lk*

## ஆய்வின் நோக்கம்

சைவசித்தாந்தம், சைவசமயம் குறிப்பிடும் இறை, உயிர், உலகு பற்றி ஆய்வுசெய்கின்ற தத்துவமாகும். சமயம் வாழ்வியலாகவும், தத்துவம் அறிவியலாகவும் விளங்குகின்றது. சைவஞானப்பரப்பில் சமூகப்பெறுமானங்களுக்கு ஒத்திசைவான அசைவியக்கத்தினையே சைவசமயம் கொண்டிருக்கின்றது. சமயம் என்பது வாழ்வியல் நெறிகளை உணர்த்துவதாக இருக்கும். சமூகத்தின் இயங்குவிசைக்கு அச்சாணியாக சைவசித்தாந்தமே விளங்குகின்றது. சைவசித்தாந்தம் வெறுமனே ஒரு தத்துவக் கோட்பாடக அன்றி வாழ்வியல் தத்துவமாகவும் இருக்கின்றது. சைவசித்தாந்தத்தினைச் சமூகமயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈழத்து அறிஞர்களின் புலமைத்துவ பங்களிப்பு காத்திரமானதாக அமைந்திருக்கின்றது.

சைவசமய மரபில் அதன் தத்துவார்த்த கொள்கைப் பிரகடனங்களை உரைக்கும் சைவசித்தாந்தம் இன்று உலகளவில் உற்றுநோக்கப்படுகின்ற ஒரு தத்துவமாக மாறிவருகின்றது. இந்த தத்துவம் அதன் இயங்கியலை முப்பொருள் கோட்பாடுகளின் மூலமாகச் செயற்படுத்தி வருகின்றது. சமயம் சார்ந்த அணுகுமுறைகளின் வழியேதான் சைவசித்தாந்தத்தினை முழுவதுமாக உணர்ந்து கொள்ளமுடியும் என்பது ஆன்றோர் வாக்கு.

அதற்கமைவாக சைவசித்தாந்தம் கோட்பாடுகளாக இருப்பதற்கு அப்பால் அது ஒரு வாழ்வியலாகவும் இருப்பதிலேயே சைவசித்தாந்தம் முழுமையான தத்துவமாக அமையும். ஒரு சமூகத்தின் சமூக இயங்கியலுக்கான தத்துவமே சமூகமயப்பட்ட தத்துவம் ஆகும். அதனை சைவசித்தாந்தம் எவ்வாறு கொண்டிருக்கின்றது. அந்த சமூக இயங்கியலுக்குரிய தத்துவமாக சைவ சித்தாந்தத்தினை கொண்டு செல்வதற்கு பண்டிதர்.முகந்தையாவின் வகிபங்கு எவ்வாறு அமைந்திருந்தன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வின் மூலங்கள்

சைவசித்தாந்த சமூகமயப்படுத்தலில் பண்டிதர் மு.கந்தையாவின் வகிபங்கு எத்தகையது என்பது பற்றிய ஆய்வில் ஆய்வின் மூலங்களாக மு.க அவர்களின் கட்டுரைகள், நூல்கள், உரைகள், பிள்ளைத்தமிழ், காவியம், மொழிபெயர்ப்பு முயற்சிகள் என்பன அமைகின்றன.

## ஆய்வு முறையியல்

மேற்குறித்த ஆய்வானது சைவசித்தாந்தப்பரப்பில் சித்தாந்தத்தினை மக்கள் மயப்படுத்துவதற்கு மக்கள் மத்தியில் சித்தாந்தக் கருத்தியல்களை கொண்டு செல்வதற்கு

மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விவரண ஆய்வு முறையியல் ஊடாக இந்த ஆய்வு மேற்கொள்ளுகின்றது.

**சைவசித்தாந்தமும் சமூகமயப்படலும்**

சமூகமயப்படுத்தல் என்பது சமூகத்தில் பரவலாக்கம் செய்யப்பட்டு சமூகத்தின் செயற்பாடுகளில் ஒன்றறக்கலத்தல் ஆகும். சைவசித்தாந்த சமூகமயமாக்கல் என்பது சைவசித்தாந்தம் எனும் தத்துவமானது சமய அறிவியல் தத்துவமாக மட்டும் இருக்காமல் சமூகத்தின் செயற்பாட்டிற்கும் அதன் அசைவியக்கத்திற்கும் ஏற்றவாறான தத்துவமாக சமூகத்தில் அதனை கொண்டு செல்லல் ஆகும். முதலில் சமூகம் இந்த தத்துவத்தினை எளிதில் விளங்கக் கூடியவகையில் இவற்றினை எளிமைப்படுத்தல் வேண்டும். இரண்டாவதாக சமூகத்தின் செயற்பாடுகளோடு பொருந்திப் போகின்ற நடைமுறைகளுடன் சைவசித்தாந்தம் குறிப்பிடும் வாழ்வியல் தத்துவங்களை ஒன்றிப் போகச் செய்தல் வேண்டும். மூன்றாவதாக சமூகத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் சைவசித்தாந்தத்தின் தாக்கம் அல்லது அதன் பின்புலம் இருக்கக் கூடியவாறான நடைமுறைச்சித்தாந்தத்தினை மக்கள் மத்தியில் பரப்புதல் வேண்டும். இதுவே சைவசித்தாந்தத்தினை சமூகமயப்படுத்தல் ஆகும்.

இந்தச் செயற்பாடுகளின் பின்னர் சமூகத்தின் ஒவ்வொரு அசைவியக்கத்திலும் அதன் இயங்கு தளத்திலும் சைவசித்தாந்தத்தின் செல்வாக்குக் காணப்படுதலை அவதானிக்கலாம். ஈழத்துச் சமூகத்தில் சைவசித்தாந்தத்தின் செல்வாக்கு எவ்வாறு உள்ளது என்பதைச் சமூகத்தில் நடைபெறுகின்ற மங்கல, அமங்கல நிகழ்வுகளில் நடைபெறும் கிரியைகளில் கண்டு கொள்ளலாம். குறிப்பாக அமங்கல நிகழ்வுகளில் மேற்கொள்ளப்படும் கிரியைமுறைகள் ஈழத்தில் மட்டுமே சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இது சைவசித்தாந்தத்தின் வழியேயான கிரியை அமைப்பு முறையில் மேற்கொள்ளப்படுவதனால் சைவசித்தாந்தம் ஈழத்தில் சமூகமயப்பட்ட தத்துவமாக இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

சைவசித்தாந்தம் சைவசமயத்தின் தத்துவக் கட்டமைப்பாகும். இறை, உயிர், உலகு எனும் முப்பொருள்கள் பற்றிய ஆராய்ச்சியில் முடிந்த முடிபான கருத்துக்களை முன்வைக்கும் தத்துவமாகச் சைவசித்தாந்தம் விளங்குகின்றது. இது சமய அறிவியலாவும், வாழ்வியலாகவும் இருக்கின்றது. ஆனால் சைவசித்தாந்தத்தினை சமய அறிவியலாக நோக்கியதோடன்றி அதனை சமய வாழ்வியலாக சமூகத்துடன் நெருங்கிய தொடர்புபட்ட தத்துவமாக இதுவரை முழுமையாக எவரும் நோக்கவில்லை.

சைவசமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அறிவியல் நோக்கில் உரைக்கும் தத்துவமாக விளங்கும் இது சமய கோட்பாடுகளுக்கு அப்பால் சமூகக் கோட்பாடுகளை

விளக்கும் தத்துவமாகவுக் இருக்கின்றது. முப்பொருள் தத்துவத்தில் உலகு பற்றிய ஆராய்ச்சியில் வாழ்வியல் நோக்குகளை சமயம் என்ற அடித்தளத்தில் வைத்து அணுகி இருக்கின்றது. இது சைவசித்தாந்தம் சமூகம் பற்றிக் கொண்டிருந்த நோக்குநிலையாகும்.

ஆலயங்களிலும் ஆதீனங்களிலும் மட்டுமே உரையாடி வந்த சைவசித்தாந்தம் மக்கள் வாழ்வியலில் உரையாடப்படவேண்டிய ஒரு தத்துவமாகும். அறநெறிப்பட்ட வாழ்வியலை எவ்வாறு வாழவேண்டும் என்ற வழிமுறையினையே சைவசித்தாந்தம் காட்டி நிற்கின்றது. சமய ஆராய்ச்சிகளோடும், விவாதங்களோடும் மட்டுமே சைவசித்தாந்தம் இருந்திருக்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியும் உரைநடை எழுச்சியும் அச்சியந்திர வருகையும்தான் சைவசித்தாந்தத்தினை சமூகத்திடம் கொண்டு செல்ல உந்து சக்தியாக இருந்தது.

ஏட்டுவடிவில் இருந்த சித்தாந்த நூல்கள் அச்சு வடிவம் கண்டதும். சைவசித்தாந்த சாத்திரங்களுக்கு உரைகள் எழுந்ததும் அந்த உரைகள் அறிஞர்கள் மத்தியில் விவாதிக்கப்படும் பொருளாக முதலாவது பரவலாக்கத்தினை ஆரம்பித்தது. சைவசித்தாந்த உரைகளின் வழியே சைவசித்தாந்த நுண்பொருளை உணர்ந்து கொள்ளும் நிலை உயர்ந்த தத்துவ ஆராய்ச்சி நிலைகளில் காணப்பட்டது. அதற்குப் பின்னர்தான் உரைநடைப் புரட்சி சைவசித்தாந்த நுண்பொருள்களை இலகு தமிழில் எல்லோரும் அறிந்து கொள்ளக் கூடியவகையில் உரைகளாக பரிணமித்தது. இது சைவசித்தாந்தத்தின் இரண்டாவது கட்ட சமூக பரவுகையாகும். இதன் பின்னணியில் தான் ஈழத்தவர்களின் பங்களிப்பும் அமைகின்றது. ஞானப்பிகாச முனிவரின் உரையுடன் ஆரம்பமாகும் ஈழத்தவர்களின் இந்த முயற்சி ஒரு சமூகமயப்படுத்தலுக்கான முயற்சியில் இருந்தே ஆரம்பிக்கின்றது.

## சைவசித்தாந்த சமூகமயப்படுத்தலில் பண்டிதர் மு.கந்தையாவின் முயற்சிகள்

ஈழத்தின் சைவசித்தாந்த வரலாறு ஞானப்பிரகாசரில் இருந்து ஆரம்பிக்கின்றது. இன்று உலகின் பல பாகங்களிலும் இருக்கும் சைவசித்தாந்தச் செல்நெறிக்கும் ஈழத்து சைவசித்தாந்த செல்நெறிக்கும் ஒரு மாறுபாடு இருக்கின்றது. ஈழத்தில் சைவசித்தாந்தம் ஒரு சமயத் தத்துவமாகவும் தத்துவத்தின் அறிவியலாகவும், சைவசமயத்தின் உயர்நாடியாகவும் இருப்பதுடன் அது ஒரு வாழ்வியலாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

எனவே ஈழத்தின் சைவசித்தாந்த மரபு சைவசித்தாந்த்தினை ஒரு தத்துவவியலாக மட்டும் நோக்காது அதனை ஒரு சமூகமயப்படுத்தப்பட்ட வாழ்வியல் தத்துவமாகவும், நோக்கி வருகின்றது என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகின்றது. இன்று காணப்படுகின்ற உலமயமாக்கல் சூழலுக்கு ஏற்றவாறு சைவசித்தாந்தமும் சமூகமயமாக்கப்பட்ட ஒரு

தத்துவமாகவே இருக்கின்றது என்பதை ஈழத்து சைவசித்தாந்த அறிஞர்களின் கருத்துக்களின் ஊடாகவும், அவர்களின் வாழ்வியல் ஊடாகவும் கண்டுகொள்ள முடிகின்றது.

சைவசித்தாந்தம் வெறுமனே தத்துவ ஆராய்சியாக மட்டுமன்றி அது மக்களுக்கு வேண்டிய வாழ்வியல் நெறிகளை உரைக்கும் தத்துவமாகவும் இருந்திருக்கின்றது. இந்தவகையில் சைவசித்தாந்தத்தினை சமூகமயப்படுத்தலில் ஈழத்தவர்களின் பங்களிப்பும் கணிசமான இடத்தினை வகித்திருக்கின்றது. இவர்களின் இந்த முயற்சிகளில் பண்டிதர் மு.கந்தையாவின் வகிபங்கு எத்தகையது என்பது பற்றி நோக்குவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

ஈழத்து சைவசித்தாந்த மரபில் புலமைத்துவ ஆளுமையாளர்களில் மு.க முக்கியமான இடத்தினை வகிக்கின்றார். சைவசித்தாந்தம் புலமைசார்ந்த நெறிக்கு அப்பால் அதனைச் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் சைவசித்தாந்தத்தினைக் கொண்டு செல்வதற்குக் கருத்தியல் ரீதியான கட்டுரைகள், ஆய்வுகள், கண்டனங்கள், உரைகள், பிள்ளைத்தமிழ், காவியம் போன்ற இலக்கிய வடிவங்கள் ஊடாகவும், நூல் உருவாக்க முயற்சிகள், பிரசங்கங்கள், மூலமாகவும் வாழ்வியல் ரீதியாக வாழ்வியல் முறைகள், சமய வகுப்புக்கள் நடத்துதல் போன்றவற்றின் ஊடாகவும் சைவசித்தாந்தத்தினை ஒரு வாழ்வியல் சித்தாந்தமாக மக்களுக்கு இனங்காட்டியதில் மு.கவின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

### மு.க வின் கட்டுரை அமைப்பு

சைவமெய்யியல் என்பது சைவசித்தாந்தம். சைவம் சிவனுடன் சம்பந்தமாவது. எனவே சிவதத்துவமாக விளங்கும் சைவசித்தாந்தத்தினை கருத்தியல் ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் ஒரு முகநோக்கோடு வாழ்ந்த மு.க அவர்களின் எழுத்துக்கள் ஒவ்வொன்றிலும் சைவசித்தாந்தமே வெளிப்படையாகவும், உட்கிடையாகவும் இருந்திருக்கின்றது. சைவசித்தாந்த நுண்பொருளைச் சகலரும் அறிய வெளிப்படுத்திய திறன் அவரை ஒரு சிறந்த கட்டுரை யாசிரியராகவும் ஆய்வாளராகவும் அடையாளப்படுத்தி இருக்கின்றது. இவரது அநேக எழுத்துக்கள் கட்டுரை வடிவங்களாகவே உள்ளன. இந்தக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூல்களாகவும், நூல்களில் வெளிவராத கட்டுரைகளாகவும் இவரது கட்டுரை முயற்சிகள் காணப்படுகின்றன. மு.க அவர்கள் தனது கருத்தியலை முன்வைப்பதற்கு

1. அறிமுகம்
2. சான்றுகள்
3. விளக்கம்
4. மூலங்களுக்கான கருத்தியல் தெளிவு
5. எதிர்வாதங்களும் அவற்றுக்கான பதில்களும்
6. நடைமுறை வாழ்வியல் எடுத்துக்காட்டுக்கள், உவமைகள்

என்றவாறு அவரது கட்டுரை அமைப்பு காணப்படுகின்றது. இந்தக் கட்டுரை முயற்சிகள் ஊடாகச் சைவசித்தாந்தக் கருத்தியலைச் சமூகத்திற்கான கருத்தியலாக சமூகவியல் நோக்கில் முன்னெடுத்திருக்கின்றார்.

## மு.கவின் சைவசித்தாந்த கருத்தியல்

கருத்தியல் என்பது ஒரு விடயத்தின் தெளிவு என்று பொருள் கொள்ளலாம். ஒரு விடயத்தினைத் தெளிவுபடுத்துவதற்காக எழுந்த விபரங்களின் தொகுப்பு என்றும் அழைக்கலாம். எனவே ஒரு விடயத்திற்கு ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்களோ அமையும். எனவே கருத்தியல் என்பது ஒரு விடயத்தின் அல்லது பொருளின் தெளிவுபற்றிய விளக்கம், விளக்கங்கள் ஆகும். இந்தக் கருத்தியல் பற்றிய கோட்பாடுகள் மேலைத்தேசத்தில் மட்டுமன்றி கீழைத்தேசத்திலும் கூட இதன் சிந்தனைப் படிமங்கள் இருந்திருக்கின்றன.

சைவசித்தாந்தம் எனும் தத்துவத்தின் மூலப்பொருள் அல்லது மூலங்களாக முப்பொருள்கள் விளங்குகின்றன. இந்த முப்பொருள்களையும் விளக்குவதாகவே சைவ சித்தாந்தத்தின் கருத்தியலாக உள்ளது. இந்தக் கருத்தியல்களே சைவசித்தாந்த சாத்திரங்கள் ஆகும். சைவசித்தாந்த சாத்திரத்தின் மூலக்கருத்தியலை முப்பொருள்களாக சாத்திரங்கள் வரையறை செய்தன. இந்த கருத்தியலைக் கொண்டுதான் ஏனைய விரிவாக்கங்கள் விளங்கங்கள் சைவசித்தாந்தத்தில் எழுந்திருக்கின்றன. திருமுறைகளே இந்தக் கருத்தியல்களுக்கு கொடுக்கப் பட்ட விளக்கங்கள் என்று வரையறைப்படுத்தலாம் (இரத்தினசபாபதி.வை.,2003:32).

சைவசித்தாந்தக் கருத்தியல் அறிவுசார் தளத்தில் வைத்து விவாதிக்கப்பட்ட நிலையில் அவற்றின் புலமைத்துவ மரபு சிதையாத வண்ணம் அந்தத் தத்துவத்தினை மக்கள் தத்துவமாக - மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான முயற்சியை மு.க அவர்கள் செய்திருக்கின்றார். இக்கருத்தியலை மக்களுக்கான கருத்தியலாக மாற்றுவதில் மு.கவின் பங்களிப்பு மொழியியல் ரீதியாக எளிமைப்படுத்தலும் கருத்தியல் ரீதியாக தெளிவுபடுத்தலும், அமைப்பியல் ரீதியாக காட்சிப்படுத்தலும் சாதாரண மக்களாலும் விளங்கக் கூடிய வகையில் மக்களுக்கு தேவையானவற்றினை கொடுப்பதாகவுமே மு.கவின் பங்களிப்பு அமைந்திருக்கின்றது.

கருத்தியல் ரீதியான தெளிவினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி சைவசித்தாந்தம் மக்கள் விளங்கிக் கொள்ளும் தத்துவம் ஆகும் என்பதை உணர்த்துவதாக அவரது எழுத்து முயற்சிகள் இருந்திருக்கின்றன. சமூகப் பெறுமானங்களுக்கு முக்கியம் கொடுத்து

சமூகவாழ்வியலை செம்மைப்படுத்துகின்ற தத்துவப் போக்கினை மு.கவின் பல கட்டுரைகள் வாயிலாக அறிய முடிகிறது.

கட்டுரைகள் வாயிலாக சைவசித்தாந்தத்தினை சமூக சிந்தனைப்பட்ட தத்துவமாக சமூகத்திற்கான நற்பேற்றுக்காம் வழிகளை உரைத்திருக்கின்றது. மு.க அவர்களின் திருவெம்பாவைகாட்டும் பரைதரிசனம் (கந்தையா,மு.,2016:142), அம்மைக்கும் சைவசித்தாந்தம் இம்மைக்கும் சைவசித்தாந்தம் (கந்தையா,மு.,1978:96), சைவக்கிரியைகள் அறிவியல் விளக்கங்கள் (கந்தையா,மு., 2002:23), தமிழில் அர்ச்சனை எத்தமிழில் (கந்தையா,மு.,1997:14), சேக்கிழார் காட்டும் சைவநீதி (கந்தையா,மு., ஈசுர வருடம்:17), சிவாலயச் சூழல் சிவமயமாதல் வேண்டும் (கந்தையா,மு.,1999:9), இந்நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் சைவசித்தாந்தம் (கந்தையா,மு., 1999:10), சைவநீதி (கந்தையா,மு.,1993:86), மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் (கந்தையா,மு.,1968:163), சைவமகிமையும் பெரியபுராணமும் (கந்தையா,மு.,2003:231), சேக்கிழார் தந்த புனித தமிழ்க்காப்பியம் (கந்தையா,மு.,2003;186), சேக்கிழார் காட்டுஞ் சைவநீதி (கந்தையா,மு., 2003;74), தமிழரின் சமயநெறியாகிய சைவம் எது (கந்தையா,மு.,2003:63), ‘சமயக்கல்வியின் எதிர்காலம்’[17] (கந்தையா,மு.,2003;189), தேர்மகத்து வம் (கந்தையா,மு., 2003:176), சிவாலய பூசையில் தமிழ் வேதம் (கந்தையா,மு.,2003:166), போன்ற கட்டுரைகள் சமூகத்திற்கான செய்திகளைச் சைவசித்தாந்தம் கொண்டிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது. ஆகவே சைவசித்தாந்தத்தினை சமூக மயப்படுத்துவதற்கு மு.க அவர்களின் கட்டுரைகளும் அவை கருதிய பொருள்களும் காரணமாக அமைந்திருக்கின்றன.

வேதங்களையும் ஆகமங்களையும் ஆதாரங்களாகக் கொண்டு அவை உரைத்திருக்கும் தத்துவக் கருத்துக்களை எளிமைப்படுத்தி மக்கள் கருத்தியலாக முன்வைத்திருக்கின்றார். குறிப்பாக ஆகமங்கள் உரைத்திருக்கின்ற ஆலய வழிபாடு, அமைப்பு, பூசைமுறைகள் போன்றவற்றினைச் சாதாரண மக்களால் விளங்கிக் கொள்ளமுடியாது. அவற்றினை மக்கள் மத்தியில் கொண்டு சென்று ஆகமங்கள் இவற்றைத்தான் உரைக்கின்றன என்று ஆகமச் செய்திகளை மக்கள் வாழ்வியலுக்கு ஏற்றவாறு, ஆலயந்தொழுவது ஏன்? எப்படி?, சைவசித்தாந்த நோக்கில் சைவக்கிரியை விளக்கம் போன்ற நூல்களில் விரித்துரைத் திருக்கின்றார். சிவாகமங்களின் பெறுமானம் எத்தகையது. அது எவற்றினை உரைத்திருக்கின்றது என்பது பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ‘நினைப்பார்க்கும் பேசுவார்க்கும் ஒரு முன்னிலை வேணுமே உருவம் இல்லாவிட்டால் உருவத்தின் சாயலையாவது முன்னிலைப் படுத்தியாக வேண்டுமே. இக்கைங்கரியத்தை நிகழ்த்தச் சிவாகமங்கள் தோன்றியுள்ளன. அவையுஞ் சிவன் வாக்காகவே

> தோன்றியுள்ளன. மனித அறிவின் எந்த உயர்மட்டத்துக்கும் எட்டாத உண்மைகளை அவை சொல்வதால் அவை சிவவாக்கேயாக நிரூபிக்கப்பட்டுள்ளன.’ (கந்தையா,மு., 2001;82)

என்று சிவாகமக் கருத்தியலை மிகச்சுருக்கமாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றார். ஆலயம் என்பது மக்கள் வழிபாடு செய்கின்ற தூய்மையான இடமாகும். மக்களை ஒன்றிணைக்கும் நிறுவனங்களாக விளங்கும் இந்து ஆலயங்கள் எவ்வாறு அமையவேண்டும். அங்கு எவ்வாறான விக்கிரங்கள் வைக்கவேண்டும். என்னென்ன பூசைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விதிமுறைகளை வகுத்திருக்கும் ஆகமங்கள் மிகச் சுருங்கிய வடிவிலேயே இவற்றினை உரைத்திருக்கின்றன.

கல்விஞானம் உள்ள ஒருவராலேயே விளங்கிக் கொள்ளக் கூடியவாறாக இருந்த இந்த ஆகமக்கருத்துக்களை மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் கருத்தியல் தெளிவினை மு.க செய்திருக்கின்றார். ஆலயங்களின் தன்மை, அமைப்பு என்பன சைவசித்தாந்தத்தோடு எவ்வாறு பொருந்திப் போகின்றன என்று சிவாகமங்கள் குறிப்பிடுவதனை மு.க அவர்கள் பின்வருமாறு தெளிவுறுத்துகின்றார்.

> ‘கோயிலில் எழுந்து விளங்குந் தெய்வ சாந்நித்தியத்தையே நாம் அணுகுகின்றோம். அதனியல்பான தூய்மையை அணுகுமளவுக்கு நமக்கும் அகப்புறத்தூய்மை அவசியம். அதனியல்பான நொய்மையை அணுகுமளவுக்கு நம்மிடத்து ஆடம்பரமின்மையும், அமைதியும், தணிந்த நடையும் பணிந்த உள்ளமும் வேண்டும். மின்சாரத் தேக்க நிலையங்களை அணுகும் வேளையிற் கடைப்பிடிக்கும் அளவு அச்சபயமும் எச்சரிக்கையும் வேண்டும். ஆலயமொன்றில் அவரவர் தகுதிக்கு ஏற்ற வகையில் அவரவர் நின்று கொள்ள வேண்டிய ஏற்பாடுண்டு. தேகான்மா, பூதான்மா, அந்தரான்மா, சுத்தான்மா, மந்திரான்மா என ஆன்மாக்களிற் பேதமுண்டெனச் சர்வஞானோத்தராமகஞ் சொல்கின்றது. (கந்தையா,மு.,2001:92)

என்று ஆகமங்கள் உரைக்கும் ஆலயங்கள் பற்றிய விதிமுறைகளில் சைவசித்தாந்தம் சமூகத்திற்கு எவ்வாறு பயனுடைய தத்துவமாக இருக்கின்றது என்பதை தனது எழுத்துக்கள் மூலம் நிறுவிச் சென்றிருக்கின்றார்.

சைவசித்தாந்தம் சமூகமயப்படுத்தல் என்பது சைவசித்தாந்தக் கருத்துக்களைச் சமூகத்திற்குக் கொண்டு சென்று சமூக வாழ்வியலில் அதன் நடைமுறைகளில் சைவசித்தாந்த கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்படும் விதத்திலேயே சைவசித்தாந்தம் சமூகமயப்படுத்தப்பட்ட தத்துவமாக இருக்கிறது. வாழ்வியலில் காணப்படுகின்ற சடங்குகள், வழிபாடுகள், பண்பாடு, மரபுகள் என்பவற்றில் சைவசித்தாந்தத்தின் செல்வாக்குக் காணப்படுகின்றது. இவற்றினை மக்களுக்கு எடுத்துச் சொல்வதனையே தனது எழுத்துக்கள் மூலம் மு.க செய்திருக்கின்றார்.

அவரது ‘‘சித்தாந்தச் செழும்புதையல்கள்’’, ‘‘சிவஞானசித்தித் திறவு கோல்’’ என்ற நூல்கள் வாயிலாக உயர்ஞான நிலையில் நின்று சித்தாந்த உப்பொருள்களைத் தெளிவுபடுத்தி இருக்கின்றார். ‘அப்பரின் அருட்பேற்றுக்குச் சூலை காரணம் என்ற அதே பாணியில் இங்கு ஆன்மாவின் சிவானந்தப் பேற்றுக்கு ஆணவம் காரணமென்று காட்டப்பட்டிருக்கிறது.’ (கந்தையா,மு.,1978:56) என்று சைவசித்தாந்தம் குறிப்பிடும் ஆணவ கருத்தினை எளிமைப்படுத்தி அடியவர்களின் வாழ்வியல் சம்பவங்களோடு ஒட்ட வைத்துக் காட்டியிருப்பது சமூகத்திற்கும் தத்துவத்திற்கும் இடையில் உள்ள நெருக்கத்தினையே காட்டுகின்றது. ‘சிவஞானசித்தித் திறவு கோல்’ என்னும் நூலில் ஆன்மாவின் உடலில் அஞ்சவத்தை ஒன்றாக தொழிறபடும் திறத்தினை பின்வருமாறு விளக்கியிருக்கின்றார்.

‘திடீரென்று நிகழ்ந்த ஒரு அவலச் செய்தினை மிக நெருங்கிய இரத்த உறவாளர் ஒருவர் கேட்கையில் திடுக்கி மயங்கி மூச்சே நின்று விட்டாற் போலாகும்…..’ (கந்தையா,மு.,2006:24)

சமூகத்தில் நடக்கும் சம்பங்களோடு தத்துவத்தினை விளக்குவதன் மூலமே தத்துவப் பொருள்களை இலகுவில் விளங்கிக் கொள்ளமுடியும் என்ற உத்திமுறையினை மு.கவின் அநேக எழுத்துக்களில் கண்டு கொள்ளலாம். தான் கூற வந்த கருத்தியலைத் தெளிவு படுத்துவதற்கு வாழ்வியலில் இருந்து காட்சி விளக்கங்களை முன்வைத்து அதனோடு ஒட்டவைத்த தத்துவக் கருத்தியலை மக்களுக்கு விளக்கி இருக்கும் திறன் சைவசித்தாந்த சமூமயப்படுத்தலில் மு.கவின் பங்களிப்பினை எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது.

சைவசித்தாந்தம் ஒரு வாழ்வியல் தத்துவம். அது வாழ்க்கைக்கு வேண்டிய ஒழுங்குகளை செவ்வனவே உரைத்திருக்கின்றது. தமிழ் இலக்கியப்பரப்பில் எழுந்த சங்க இலக்கியங்கள் இவற்றினை ஆழமாகவே உணர்த்தி இருக்கின்றன. அகம், புறம் என்ற தமிழர்களின் வாழ்வியலில் அகத்தின் வழியேயான புறம் வீடுபேற்றினையே குறிப்பிடுகின்றது. புறத்திணையியல் ஊடாக சைவசித்தாந்தமே உரைக்கப்பட்டிருப்பதனைப் புறப்பொருள் வெண்பாமலைக்குத் தொல்புரம் சிவபாத சுந்தரனார் எழுதிய விளக்கங்கள் ஊடாகவும் கண்டு கொள்ளலாம் (சிவபாதசுந்தரனார்,நா.,1972:124). தொல்காப்பியத்திற்கு அடுத்து திருக்குறளும் வீடு என்னும் பொருளைச் சிறப்புறவே உரைத்திருக்கின்றது (கந்தையா,மு.,1998:118)

‘‘……அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்தத் பயனே’’ (தொல்காப்பியர்.,194,887)

என்பதில் சிறந்தது பயிற்றல் வீட்டு நெறிபற்றி ஒழுகல் என்றே பொருள் கொள்ளப்படுகின்றது. இங்ஙனம் சைவசித்தாந்தத்திற்கு இலௌகீகம் அந்நியமில்லை உயிரின் இம்மைப்பேற்றுக்கு இலௌகீகமும் அம்மைப்பேற்றுக்கு ஆத்மீகமும் இறைவனாலேயே வழங்கப்படுகின்றது. (கந்தையா,மு.,1998:89) என்பது சித்தாந்திகளின் துணிபாகும். இது சைவசித்தாந்தத்தின்

சமூகவியல் நோக்கினையே எடுத்துக் காட்டுகின்றது. முருகன் வள்ளி காதல் நடகத்தில் ஒரு கட்டத்தில் முனைந்து முன்சென்ற வள்ளி ஆனை எதிர்கொண்டு திரும்பிவந்து முருகனை அடைந்த நிகழ்ச்சியில் உள்ள சைவசித்தாந்த நுண்பொருள் உயிர்களை வினைபோகம் அநுபவிக்கவிட்டு தக்கதருணத்தில் அதனை அட்கொள்ளும் திறம்தான். (கந்தையா,மு.,1998:126).

வள்ளி ஆனையை கண்டவிடத்து முருகனிடம் திரும்பிவந்த நிலையாகும். முருகனை விட்டு நீங்கி முன்சென்ற நிலையினை வினைபோக நிலையென்றும் ஆனையினைக் கண்டு முருகனிடம் வந்த நிலை வினைமீட்சி நிலை என்றும் சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது.

இவ்வாறாக மக்கள் வாழ்வியலில் உள்ள சம்பவங்கள், நிகழ்வுகள் அனைத்திலும் சைவசித்தாந்த நுண்பொருள்களே புதைந்துள்ளன என்பதை இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் மூலம் அறியக்கிடக்கிறது. இது சைவசித்தாந்தத்தின் சமூக நோக்கினை காட்டுகின்றது. இந்தத் தெளிவினை மக்கள் மத்தியில் மு.க கைலாசபதி ஸ்மிருதி ஊடாக விளக்கி இருப்பது ‘‘இலௌகீகஞ் சைவசித்தாந்தத்துக்குப் புறமல்ல’’ (கந்தையா,மு.,1998:69) என்ற அவரது கூற்று சைவசித்தாந்தம் சமூகமயப்படுத்தப்பட்ட சித்தாந்தம் என்று அடையாளப்படுத்தி இருக்கின்றார்.

**சைவக்கிரியைகள் பற்றிய சமூக நோக்கு**

சைவசமயம் ஒரு வழிபாட்டு நெறி என்பதற்கு அப்பால் அது ஒரு வாழ்வியல் முறைகளை உணர்த்தும் சமயமாக விளங்குகின்றது. இறைவனைப் பிற சமயங்கள் தூரத்தில் வைத்து வழிபாடு செய்ய சைவசமயம் ஒன்றுதான் இறைவனுக்கு உருவநாமங்கள் கொடுத்து ‘‘குனித்தபுருவமும்….’’ (திருநாவுக்கரசர்:174) ‘‘சிறையாரும் மடக்கிளியே’’ (திருஞானசம்பந்தர்:246) என்று இறைவனை மனித உறவுகளாக நோக்குகின்ற நோக்கு நிலை சைவசமயத்தில் மட்டுமே உண்டு. சைவசித்தாந்தம் ஒரு ஆய்வுநிலைத் தத்துவமாகவோ, நோக்குநிலைத் தத்துவமாகவோ அன்றி அது வாழ்வியல் தத்துவம் என்று ‘மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்’ (திருஞானசம்பந்தர்:136) என்று திருமுறைகள் உணர்த்திய வழி வாழ்வை வாழ்வாங்கு வாழுவதற்கான உயரிய தத்துவமே சைவசித்தாந்தம்.

சமயம் தனது வழிபாட்டு முறைகைள மேற்கொள்வதற்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நெறிமுறைகளைக் கொண்டிருக்கின்றது. மக்களது உயர் வாழ்வுப் பேற்றினை இலக்காகக் கொண்டு வரையறை செய்யப்பட்ட விதிப்பிரமாணங்களை உரைத்திருப்பதுதான் ஆகமங்கள் ஆகும். இறைவனின் நேர்சாட்சிப் பெறுமானங்களான இந்த ஆகமங்கள் உரைத்திருக்கும்

செய்திகள் மக்களது வாழ்வியலுக்கான ஒழுங்கு முறைகளாகும். பாடல்கள் வடிவில் இருக்கும் இந்த ஆகமத்தின் கருத்தினை விளக்குவதற்கென பல உரைகள் எழுந்திருப்பினும் அந்த உரைகளைக் கூட விளங்கிக் கொள்ளமுடியாத சாதரண மக்களுக்கு அவற்றின் பொருளைத் தெளிவிக்கும் நோக்கில் சைவக்கிரியை நெறிக்காக உருவாக்கப்பட்ட நூலாகச் 'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியை விளக்கம்' என்ற நூல் காணப்படுகின்றது. இந்த நூல் பற்றி சைவசித்தாந்த கலாநிதி க.கணேசலிங்கம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ' தமிழிலே பத்ததிகள் குறித்த நூல்கள் பல யாழ்ப்பாணத்து அறிஞர்களால் முன்னரே எழுதப்பட்டுள்ளன. இந்நூல்கள் பொதுவாக, கிரியைகளை வலியுறுத்தி அவற்றின் செயல்முறைகள், அவற்றைச் செய்வதால் ஏற்படும் பயன்கள் முதலியவற்றை விளக்கி, புராண இதிகாசத் தொடர்படுத்தி எழுதப்பட்டவையாகவே உள்ளன. தேவைக்கேற்ற அளவு இந்த வழிகளையும் பின்பற்றி சைவசித்தாந்த தத்துவ விளக்கம் கொடுத்து எழுதப்பட்டது 'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்' என்ற இந்நூல்.' (கந்தையா,மு., 2001:81)

சைவக்கிரியைகள் என்பது ஆகமம் தழுவிய கிரியைகள் ஆகும். இந்தக் கிரியைகள் மக்கள் வாழ்க்கை வாழ்வியலுக்காகவே எழுதப்பட்டது. எனவே இந்த முயற்சி சைவத்தை சமூகத்திற்கான சமயமாக அடையாளப்படுத்தும் முயற்சியாகும். இதில் பொதிந்துள்ள கருத்துக்கள் யாவும் சைவசித்தாந்தக் கருத்துக்களே என்பதையும் நிறுவி சைவசித்தாந்த கருத்துப் பின்னணியில் அமைந்தவையே சைவக்கிரியைகள். இந்தக் கிரியைகள் அனைத்தையும் எப்படி மேற்கொள்ளவேண்டும் என்று இலகு நடையில் கட்டுரை நோக்கில் எழுதி இருக்கும் பாங்கு சாதாரண மக்களும் விளங்கக் கூடியதாக உள்ளது.

கிரியை நெறிமுறைகள் அனைத்தும் மக்கள் வாழ்வாங்கு வாழ்தலை நோக்காகக் கொண்டே வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாழ்வியலில் மக்கள் தமது வாழ்க்கையினை அறம், ஒழுக்கம் சார்ந்து வாழ்வதோடு ஆரோக்கியம் சார்ந்தும் வாழ்தல் வேண்டும் என்ற அவசியத்தினை சைவக்கிரியைகளின் செயற்பாடுகள் மூலம் கண்டு கொள்ளலாம். இக்கிரியை நெறிகளில் உள்ள மருத்துவம் தொடர்பாக மு.க பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> 'கர்ப்பவதியின் உச்சி வகிர்தலினால் கர்ப்பவதியிலிருக்கும் சிசுவுக்கு ஏற்படக்கூடிய அங்கவீனக் குறைபாடுகள் நிவர்த்தியாகும் என்பர். காதில் தொளையிடுவதனால் குழந்தைக்கு நரம்பு சம்பந்தமாக நிகழக்கூடிய சில நோய்கள் தடைப்படும் என்பர். சந்தியாவந்தனத்தில் தொடுமிடங்களும் குறிவைக்குமிடங்களும் உடலில் நோய் தோன்றுவதற்குரிய மூல இடங்களிற் பல என்கிறார்கள். குறி வைக்கும் இடங்களில் அதிகமானவை எலும்பு பொருந்தும் நிலையங்கள் ஆக இருத்தலினால்

> அவற்றிலணியப்படும் வீபூதியினால் அவற்றுக்கு ஸ்திரத்தன்மையோ வலுவோ உண்டாகலாம் என்பதும் பொருந்துவதேயாகும்.' (கந்தையா,மு.,2001:112)

என்று சைவக்கிரியைகளை விளக்கியதோடு மட்டுமன்றி சைவக்கிரியைகளில் உள்ள மருத்துவ நோக்குகளையும் குறிப்பிட்டிருப்பது கிரியை நெறிகளில் உள்ள சைவசித்தாந்தத்தினை சமூகவியல் அடிப்படையில் நோக்கியிருப்பதனையே எடுத்துக் காட்டுகின்றது. எனவே இதனைச் சமூக சிந்தனை உள்ள சித்தாந்தமாகக் காட்டுவதோடு மட்டுமன்றி சைவசமயமே சமூகமயப்பட்ட சமயம் என்றும், மு.க நிறுவிச் சென்றிருக்கின்றார். அவரது சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள் எனும் நூலில் உள்ள பூர்வக்கிரியைகள், அபரக்கிரியைகள், அநுபந்தத்தில் உள்ள கட்டுரைகள் அனைத்தும் சைவசித்தாந்தத்தினை சமூகவியல் நோக்கில் அணுகிய முறையினை கண்டுகொள்ளலாம்.

## பெரியபுராணம் பற்றிய சைவசித்தாந்த சமூக நோக்கு

இந்திய அறிவாராய்ச்சியியலில் முப்பொருள்கள் பற்றி எழுந்த கருத்தியல் விவாதங்களால் உருவான வேதாந்தம் தெளிவான முடிவுகளை வழங்காது போக முடிந்தமுடிபான முடிவுகளை உரைத்த சைவசித்தாந்தம் மக்களுக்கான சித்தாந்தமாகவே எழுச்சியைக் கண்டிருக்கின்றது. இந்த எழுச்சியை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் முயற்சியினையே சைவசித்தாந்த அறிஞர்கள் பலரும் செய்திருக்கின்றார்கள். இவர்களில் மு.க வை சித்தாந்தத்தினை பெரியபுராண அடியவர்களின் வரலாற்றுச் சம்பவங்கள் ஊடாக சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

மு.க 'சேக்கிழார் காட்டுஞ் சைவநீதி' (சைவநீதி,1993:85), 'சைவமகிமையும் பெரியபுராணமும் (கந்தையா,மு.,2003:147), 'சேக்கிழார் தந்த புனித தமிழ்க்காப்பியம்' (கந்தையா,மு.,2003:149), கட்டுரைகள் மற்றும் ஆய்வு முயற்சிகளில் பெரியபுராணம் பற்றி எழுந்த அரியவும் பெரியவும் என்ற மூன்று தொகுதிகள் கொண்ட நூல், மற்றும் பெரியபுராண சூசனம் என்ற நூல் இரண்டும் முக்கியம் பெறுகின்றன. இவற்றில் அரியவும் பெரியவும் என்ற மூன்று பாகங்களைக் கொண்ட நூல் பெரியபுராணத்தினை சைவசித்தாந்த வாழ்வியல் நோக்கில் அணுகி இருப்பது சைவசித்தாந்தத்தின் சமூகவியல் நோக்கினையே காட்டுகின்றது. எடுத்துக்காட்டாக,

> 'உலகிற் சமயமரபு, வழிபாட்டுமரபு, நாற்பாத ஒழுக்க மரபு, வேதாந்த சித்தாந்த மரபு, வேதாந்த சித்தாந்தம் கடந்த சமரச மோன மரபுகளை உற்பத்தி பண்ணிப் பேணுதல் ஒருவகை. இவை வெறுமனே சாஸ்திர வித்தைகளாயிருந்து ஏட்டுச் சுரக்காயாய்ப் போய்விடாமல், மக்கள் அவற்றின் பலப்பேறுகளைக் கண்ணெதிரே கண்டு நம்பிக்கை கொண்டு அவற்றை அநுசரித்து ஈடேறுதற்கு உபகாரமாம் வகையில் ஆத்மீக

> உயர்நிலைப் பண்புகள் நம்மிற் பிரதிபலிக்க மக்களிடையே வாழ்ந்து அவர்களுக்கு முன்னிலை விளக்காய் விளங்கக் கூடிய அதிஉத்தமர்களைக் கலாகாலத்தில் உலகில் தோற்றுவித்துக் கொண்டிருப்பது ஒருவகை.'[38](கந்தையா.மு.,1986;48)

என்று சுந்தரரின் வரலாற்றுச் செய்தி குறிப்பிடும் தத்துவ நோக்கினை இலகு தமிழில் விளக்கியிருக்கின்றார். அடியவர்களின் வாழ்வியல் பேறில் உள்ள சித்தாந்த நுண்பொருள் மக்கள் தத்துவத்திற்கான ஆதாரமாகும் என்பதை வலியுறுத்துவதாகவே மு.க அவர்களின் மேற்குறித்த கருத்து அமைகின்றது. பெரியபுராணத்தின் வழியே உள்ள சைவசித்தாந்த கருத்துக்களை அரியவும் பெரியவும் என்ற நூலின் வாயிலாக விரித்துரைக்கும் மு.க அவர்களின் பொறிமுறை சைவசித்தாந்த சமூகமயப்படுத்தலை நோக்காக கொண்டே அமைந்திருக்கின்றது.

அத்துடன் பெரியபுராணத்திற்கு வரைந்த சூசன உரையும் சைவசித்தாந்த உயர்நிலைக் கருத்தியலை அடியவர்களின் வாழ்வியலோடும் வாழ்வியல் சம்பவங்களோடும் பொருந்திப் பார்த்திருக்கும் நோக்குநிலை சமூகத்திற்கான தத்துவமாக சைவசித்தாந்தமே உண்டு என்று அறுதியிட்டிருக்கின்றார்.

### உரைமுயற்சிகளும் சமூகமயமாக்கமும்

சைவசித்தாந்தக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு மு.க கையாண்ட இலக்கிய வடிவங்களில் உரைமுயற்சியும் ஒன்றாகும். மு.கவின் உரைமுயற்சிகளாக திருக்குறள் ஒழிபியல் பரிமேலழகர் உரைவிளக்கம், நல்லை நாவலன் கோவைக்கு பிள்ளைக்கவி சிவராஜசிங்கத்துடன் இணைந்து எழுதிய உரை, பெரியபுராணத்திற்கு நாவலர் விட்ட இடத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட சூசன உரை, திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்திற்கு எழுந்த ஆறுமுகத்தம்பிரான் உரைக்கு கொடுக்கப்பட்ட உரைவிளக்கம், திருஞானசம்பந்தரின் வினாவுரைப் பதிகங்களுக்கு எழுதிய உரை போன்ற முயற்சிகளைக் குறிப்பிடலாம்.

இவற்றில் திருக்குறள் ஒழிபியலுக்குப் பரிமேலழகர் உரைக்குக் கொடுக்கப்பட்ட உரைவிளக்கம் சைவசித்தாந்த நோக்கில் மேற்கொள்ளப்பட்ட விளக்கமாகவே காணப்படுகின்றது. இதில் எடுத்துக் காட்டப்படும் உதாரணங்கள் கூட சித்தாந்தக் கருத்தியலையே உணர்த்தி நிற்கின்றது. ஒழிபியல் கருத்துக்களை பரிமேலழகரின் வழிநின்று சைவசித்தாந்த நோக்கில் விளக்கி இருப்பதனையே அவரது இந்த உரைமுயற்சி ஊடாக கண்டு கொள்ளலாம்.

தொடர்ந்து பெரிய புராணத்திற்கு எழுதப்பட்ட சூசன உரை என்பது சைவசித்தாந்தம் ஒரு சமூகமயப்பட்ட சித்தாந்தமே என்று நிறுவுவதற்கு உயரிய சான்றாக அமைகின்றது. சைவசித்தாந்தத்தினை சமூகமயப்படுத்துதலில் மு.கவின் பங்களிப்பு மிக உச்சமாகப் பெரியபுராண சூசனம் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. பெரியபுராணத்தில் வருகின்ற அடியவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு உரிய தத்துவப்பின்னணியினை விளங்கி இருப்பது தான் சூசனத்தின் உட்கிடையாகும். நடைமுறைக்குப் பொருந்தாது என இக்காலத்தவர்களால் உரைக்கப்படும் அடியவர்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளில் இருக்கும் உள்ளார்ந்த பொருள் இதுதான் என மிக எளிய நடையில் அனைவராலும் விளங்கங்கூடிய வகையில் தக்க சான்றுகளோடும் விவாதங்களோடும் ஆய்வு நோக்கில் எழுதப்பட்ட சூசனம் சைவசித்தாந்தம் ஒரு வாழ்வியல் சிந்தாந்தம் என அடையாளப்படுத்தி இருக்கின்றது. அந்த சித்தாந்தத்தினை சைவசித்தாந்த சமூகவியல் கண்ணோட்டத்தில் சூசனத்தின் ஊடாக விளக்கி இருக்கின்றார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணத்துக்கு எழுதிய சூசன உரை பின்வருமாறு அமைகின்றது.

> ‘வாழ்வியல் இலட்சியப் பேறான ஆத்மிக ஈடேற்றம் பற்றிய மெய்யுணர்வுக் காட்சியும் அதை அநுசரணையிற் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறை யொழுக்கங்களுங் கொண்டிருத்தல் சமயங்களின் பொதுவிலக்கணமாகும்’ (கந்தையா,மு.,1993:246)

சமயத்துக்காக மக்களல்ல மக்களுக்காகவே சமயம் (கந்தையா,மு.,1993:249) என்ற மு.கவின் கருத்தியல் சமயத்தினையும் சமயத்தின்வழியே எழுந்த சைவசித்தாந்தத்தினையும் மக்களுக்கானவையாகவே காட்டி இருக்கின்றது. மேலும் தனது சூசனத்தில்,

> ‘மக்கள் அவரவர் கொள்ளுமளவிற் கேற்பச் சமய உண்மைகளை அறிந்து அவற்றின் வழி நிற்கவும் கால அடைவில் அதன்மூலம் தமக்கு வாய்க்கும் உள்ளுணர்வு விருத்திப்பாங்கான அகவளர்ச்சிக்கேற்பத் தம்நிலையில் இருந்து சமயாநுசாரக் கிரமமாக மேன்மேற் சமயங்களில் இடம்பெற்றுவந்து இறுதியிற் சற் சமயஞ் சார்ந்து அறுதியாக உய்வடைய வைக்கவும் வேண்டியே சிவன் சமயங்களைப் பல பட வகுத்தார் என உய்த்துணரக் கிடத்தலாம்’ (கந்தையா,மு., 1993:73)

என்ற சூசன உரையானது சமயத்தினை உயிர்களின் ஈடேற்றத்திற்கான வழித்தடமாகவும் உலகியலை அந்த உயர்களின் போக நுகர்ச்சிக்கான இடமாகவும் மக்களுக்கான சமயத்தின் போக்குகளை மக்கள் சமயம் என்று சமயத்தினையும் தத்துவத்தினையும் மக்கள் மயப்படுத்திய நோக்கினை இவரது சூசன உரைகளில் கண்டு கொள்ளலாம்.

மு.கவின் உரை முயற்சிகளில் திருஞானசம்பந்தரின் வினாவுரைப் பதிகங்களுக்கு இவரால் செய்யப்பட்ட சித்தாந்த உரையானது சைவசித்தாந்தத்தினை சமூகவியல்

நோக்கிலும் அணுகி இருப்பதை அவதானிக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக, '......'நான்', 'எனது' என்ற இரண்டையும் உருக்கிக் கழிக்கவல்ல கழித்தொழிந்த மெய்யன்பாளர் உண்ணும் பதார்த்தம் அவரோடும் அந்நியமாந்தன்மை புலப்பட அவர்பால் நின்றியலும் சிவனுக்கும் உரியதாம் என இவ்வாசகங்கள் துடியாக எடுத்துரைக்கின்றன. இது இங்ஙனமாக அத்தகை அன்பாளர் தாம் விரும்பி ஏதேனும் ஊட்டிற் சிவன் உண்பானோ மாட்டானோ என்பது பற்றி ஏது மோசையமும் நிகழ்த்தற்கிடமின்றாம். சாமானியத்தில் நிகழும் நைவேத்திய பூசையின் தத்துவப் பின்னணி இதுவாகும்.' (கந்தையா,மு.,2017:16)

சைவசமயம் இறைவனை உருவநாமம் கொடுத்து மானிட வடிவில் வழிபடும் சமயமாகும். மனித உருவில் இருக்கும் இறைவனுக்கு மனித வாழ்வின் மங்கல நிகழ்ச்சிகளை இறைவனுக்குச் செய்துவரும் சமய நடைமுறைகளோடு இறைவனுக்கு உணவு ஊட்டி விடும் நிலையிலும் அடியவர்கள் உள்ளார்கள் என்ற நிலை சமயத்தினையும் அந்த சமயத்தின் இயங்குதளமான சைவசித்தாந்தத்தினையும் வாழ்வியல் நெறிமுறைகளுக்கு ஒன்றிப்போகச் செய்திருக்கின்றது. என்பதை அவரது இந்த உரைகள் மூலம் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட உரைமுயற்சிகள் ஊடாக சைவசித்தாந்தத்தினை உயர்நிலைத் தத்துவமாக உயர்ந்த கல்விஞான அறிவின் மூலமே விளங்கிக் கொள்ளமுடியும் என்ற நிலைக்கு அப்பால் அதனைச் சாதாரண கல்வியறிவினாலும் விளங்கிக் கொள்ளலாம் என்ற அளவிற்கு மு.கவின் உரைமுயற்சி அமைந்திருக்கின்றது. அத்துடன் சைவசித்தாந்தம் என்பது உயர் ஞான தத்துவம் என்றில்லாமல் அது மக்களுக்கான மக்கள் வாழ்வியல் ஈடேற்றத்திற்கான தத்துவமாகவும் இருக்கின்றது என்பதை இவரது உரைகள் மூலம் உற்றுநோக்க முடிகிறது.

**கவியாக்கத்தில் சைவசித்தாந்தம்**

மு.க அவர்கள் சைவசித்தாந்த அறிஞர் என்பதற்கு அப்பால் ஒரு சிறந்த புலவராகவும் இருந்திருக்கின்றார். அவரது புலமைத்திறத்திற்குச் சான்றாக அவரால் எழுதப்பட்ட பிள்ளைத்தமிழ்கள், திருக்கேதீஸ்வர மான்மியம் என்ற புராணகாவியம் என்பன தக்க சான்றுகளாகும். இந்தக் கவிதை ஆக்கத்தின் மூலமாகவும் மு.க அவர்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களையே கூறிச் செல்கின்றார். சைவசித்தாந்தத்தினை தன் வாழ்வின் அங்கமாகக் கொண்ட மு.கவின் ஒவ்வொரு எழுத்திலும் சைவசித்தாந்த கருத்தியல்களே காணப்படுகின்றன. சைவசித்தாந்தம் ஆன்மாக்களின் வாழ்வியல் நுகர்ச்சிக்கான தத்துவமாகவும் காணப்படுகின்றது. என்பதை இவரது பல பாடல்கள் மூலம் கண்டு கொள்ளலாம். சைவசித்தாந்தம் சமூகத்திற்கான சித்தாந்தமாகும் என்ற கோட்பாட்டியலைக் கொண்டு சென்றவராக மு.க அவர்கள் காணப்படுகின்றார். அவரது மாவைப்பிள்ளைத்தமிழ்

சைவசித்ததாந்த கருத்தியல்களைக் கொண்ட பிள்ளைத்தமிழ் என்று இதற்கு அணிந்துரை வழங்கிய சு. நடேசபிள்ளை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ‘இந்நூல் பிள்ளைத்தமிழிலக்கணத்துக் கமைந்ததாய்க் குமரகுருபரர் முதலிய சான்றோர்கள் காட்டிய மரபைப் பின்பற்றியுள்ளது. சிறந்த சொன்னயங்களுங் கற்பனைகளும் இதில் ஆங்காங்கு காணப்படுகின்றன. சைவசித்தாந்தக் கருத்துக்கள் இதிற் செறிந்துள்ளன’ (கந்தையா,மு.,1967:VII)

என்ற அவரது கூற்றுக்கு அமைவாகச் சைவசித்தாந்தத்தினை கவிதையியலுக்கு ஊடாகவும் மக்கள் மத்தியில் கொண்டு சென்றிருக்கின்றார். “…….கற்பாந்த முற்றுக் கனத்துத் திணிந்த நமர் கன்மவினை கழுவி யுய்யத்….” (கந்தையா,மு.,1967:VIII) என்ற பாடல் வரிகள் சான்றாகின்றன. மக்கள் அதிகமாக விரும்பும் இந்தக் கவிதையியலானது கருத்துக்களை மக்கள் மத்தியில் பகிர்வதற்குச் சிறந்த சாதனமாகும். இந்த இலக்கிய வகைமையினூடாக சைவசித்தாந்தக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்று மக்கள் தத்துவமாக மாற்றுவதற்கு மு.க அவர்களின் முயற்சியான பிள்ளைத்தமிழ்கள் ஊடான சித்தாந்த கருத்துப்பகிர்வினை அவதானிக்கலாம். நாவலர் பிள்ளைத்தமிழ் ஊடாகவும் சைவசித்தாந்தக் கருத்தினை வெளிப்படுத்தி இருக்கும் திறத்தினை இதற்கு நயவுரை வழங்கிய புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை,

> ‘……பக்திச்சுவை, தமிழ்ச்சுவை, சைவஞானச்சுவை மூன்றையும் தம் புலநாவாற் சுவைத்துச் சுவைத்து அச்சுவையுணர்வினைக் கவிதைகளாகிய நன்கலங்களிலே அளவாக நிறைத்து வைத்து நமக்குச் சமர்ப்பிக்கிறார் ஆசிரியர்’ (கந்தையா,மு.,1979:32)

என்று குறிப்பிடுகின்றார். எனவே சைவசித்தாந்தத்தினை சமூகமயப்படுத்தல் எனும் இருபதாம் நூற்றாண்டு சிந்தனையினை மு.க அவர்கள் தனது எழுத்துக்கள் மூலம் செயற்படுத்தி இருகின்றார். இவரது காவியமுயற்சியான திருக்கேதீச்சர மான்மியம் சைவசித்தாந்த செம்பொருளினை காவிய மணங்கமழ விரித்துரைக்கின்றது. காவிய இலக்கணம் குறிப்பிடும் சுவைகளுக்கு அப்பால் சைவசித்தாந்த சுவையினையும் கூட்டித் தந்திருக்கும் மு.க அவர்களின் அத்தனை எழுத்துலக செயற்பாடுகளிலும் சைவசித்தாந்தமே மேலோங்கி இருந்திருக்கின்றது.

## கண்டனமரபின் ஊடான சைவசித்தாந்த சமூகமயவாக்கம்.

கண்டனம் என்பது கருத்தியல் ரீதியாக எதிர்ப்புத் தெரிவித்தலாகும். ஈழத்தில் கண்டன மரபு என்பது நாவலரில் இருந்து குறிப்பிடத்தக்க வளர்ச்சி நிலையினை எடுத்துத்

தொடர்கின்றது. ஆரம்பத்தில் பிறசமயங்களுக்கு எதிரான தீவிர எதிர்ப்புக்களைக் கொண்டதாக இந்த கண்டனங்கள் இருந்திருக்கின்றது. சைவசமயத்தின் அடிப்படைகளை, கோட்பாடுகளை விளக்கி அதற்கு எதிரான வாதங்களை மறுக்கும் தன்மையினைக் கண்டனங்களில் கண்டு கொள்ளலாம். இத்தகைய கண்டனங்கள் நாவலருக்குப் பிறகு பல்வேறு அறிஞர்களால் முன்னெடுக்கப் பட்டிருக்கின்றது.

மு.கவினால் மேற்கொள்ளப்பட்ட கண்டனங்கள் என்பது பிறசமயத்திற்கெதிரானதாகவும், எமது சமயத்திற்குள் இருக்கும் பிறழ்வுகளுக்காகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. குறிப்பாக நாவலர் சிலை பெயர்ப்பு தொடர்பான கண்டனங்களும் சைவம், இந்து தொடர்பான சர்ச்சைக்கான கண்டனங்களும், ஆலயங்கள், கிரியைகள் தொடர்பான கண்டனங்களும் மிகமுக்கியமானவை அத்துடன் அவரால் நடத்தப்பட்ட ‘சைவத்தமிழ் பண்பாட்டு இயக்கம்’ வெளியிட்ட அவரது கட்டுரை தாங்கிய பிரசுரங்கள் கண்டனங்களுக்காக எழுந்த பிரசுரங்களாகவே உள்ளன.

பின்னர் இவைகளைத் தொகுத்து சனாதன சைவவிளக்கம் எனும் தலைப்பில் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நூலின் வழியே மு.க அவர்களின் கண்டனங்கள் மூலமான சைவசித்தாந்த சமூக நோக்கினை அவதானிக்குமிடத்து பத்து வகையான கட்டுரைகள் கண்டன மரபில் சைவசித்தாந்த சமூக நோக்கினை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. சைவ வாழ்வியலில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நியமங்கள் தொடர்பாக அந்த பின்னணியில் தூய்மைவாத போக்கில் சைவசித்தாந்த வாழ்வியலுக்குப் பங்கம் ஏற்படுகின்ற போது எழுந்த எதிர்ப்புக்குரலாகவே இவரது பத்து கண்டன பிரசுரங்களும் அமைந்திருக்கின்றன.

சைவத்தமிழ் கலாசார மேன்மைகளை சிதைக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக மு.க அவர்களின் கண்டனங்கள் எழுத்திருப்பதாக இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய வி.சங்கரப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார் (கந்தையா,மு.,2007:72) சைவசித்தாந்த வாழ்வியலோடு தொடர்பு பட்ட இந்த கண்டனங்கள் அனைத்தும் சைவசித்தாந்த வாழ்வியல் எவ்வாறு வாழவேண்டும் என்ற அறிவினையும் புகட்டுகின்றது. எனவே சைவசித்தாந்தம் சமூகத்திற்கான வாழ்வியல் நெறிகளை உரைக்கும் சமூகமயப்பட்ட சித்தாந்தமாக சைவசித்தாந்தத்தினை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு மு.க அவர்களால் கையாண்ட இலக்கிய வடிவங்களில் ஒன்றாக கண்டனங்கள் அமைந்திருக்கின்றன.

## நிறைவுரை

சைவசித்தாந்த்தினை சமூகமயப்படுத்துவதில் மு.க அவர்களின் வகிபங்கு என்பது இரண்டு தளங்களில் நிகழ்திருக்கின்றது. ஒன்று அறிவியல் தளம் இன்னொன்று வாழ்வியல் தளம். அறிவியல் தளத்தில் நின்று அவரது புலமைத்துவ வெளிப்பாடுகளால் எழுந்த நூல்களின் வாயிலாக சைவசித்தாந்த செம்பொருள்களை அனைவரும் விளங்கிக் கொள்ளக் கூடியவகையில் மக்களின் வாழ்வியலுக்கு அவசியமானது என்ற அளவில் அவரது கருத்தியல் போக்குகளால் சைவசித்தாந்த்தினை மக்கள் சித்தாந்தமாகக் கொண்டு சென்றிருக்கின்றார். கற்றோரால் ஏற்றிப் போற்றப்படும் தத்துவமாக அல்லாமல் அது அனைவராலும் பின்பற்றப்பட வேண்டிய தத்துவம் என தனது கட்டுரைகள், உரைகள், மொழிபெயர்ப்புக்கள், கவி ஆக்கங்கள், நூல் வெளியீடு, துண்டுப்பிரசுரங்கள் மூலமாக நிறுவிச் சென்றிருக்கின்றார். ஈழத்து சைவசித்தாந்த அறிஞர்களில் இருந்து மு.கந்தையாவின் வகிபாகம் என்பது சைவசித்தாந்தத்தினை ஆய்வியல் ரீதியாகவும், அநுபவ ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் அணுகி இருப்பதோடு அதனை நூலுருவாக்கும் முயற்சி ஊடாக ஆவணப்படுத்தி இருப்பதுதான் அவரது இந்த முயச்சிகளின் வெற்றியாகும்.

## உசாத்துணை


கந்தையா.மு., (1994), **சைவசித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள்**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கந்தையா,மு.,(1998),**சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இரத்தினசபாவதி,வை.,(2003),**திருமுறைத் தெளிவே சிவஞான போதம்**, சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

கந்தையா, மு., (2016), **அருள்ஒளி,** துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

கந்தையா,மு., (1978), **சித்தாந்தச் செழும்புதையல்கள்,** ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீடம்.

கந்தையா,மு.,(2002), **இந்துசாதனம்,** சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

கந்தையா,மு.,(1997),**கலசம்,** ஐப்பசி, கார்த்திகை, மார்கழி.

கந்தையா,மு.,(1999), **சைவநீதி,** ஈசுர வருடம்.

கந்தையா,மு.,(1993),**தவத்திரு வடிவேற்சுவாமிகள் மலர்,** திருநெறிய தமிழ்மறைக்கழகம், இணுவில்.

கந்தையா,மு.,(1968), **நால்வர் நெறி,** கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கம். கொழும்பு.

கந்தையா.மு,(2003), **சித்தாந்த ஞானக்களஞ்சியம்,** இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா**,** நூல்வெளியீட்டுக் கழகம், ஏழாலை.

கந்தையா,மு.,(2001),**சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்**, முருகேசு கந்தப்பிள்ளை ஞாபகார்த்த வெளியீடு, மலேசியா,

கந்தையா,மு.,(2001), **சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்,** முருகேசு கந்தப்பிள்ளை ஞாபகார்த்த வெளியீடு**,** மலேசியா,

கந்தையா,மு.,(1978), **சித்தாந்தச் செழும்புதையல்கள்,** ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீடம்

கந்தையா,மு.,(2006), **சிவஞானசித்தித் திறவுகோல்,** கொழும்பு சிவத்திரு மன்றம்.

சிவபாதசுந்தரனார்,நா., (1972),**புறப்பொருள் வெண்பாமலை ஆராய்ச்சி**, வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம்,

கந்தையா,மு.,(1978), **சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி**, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

கந்தையா,மு., (1986), **அரியவும் பெரியவும் (இரண்டாம் பாகம்),** துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

கந்தையா,மு., (2017), **திருமுறைத்தேம்பிழி,** நூலாசிரியரின் நூற்றாண்டு அகவை நினைவாக

குடும்பத்தினரின் அன்பளிப்பு வெளியீடு.

கந்தையா,மு.,**மாவைப் பிள்ளைத்தமிழ்,** மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றம்.

கந்தையா,மு.,(1979), நாவலர் பிள்ளைத்தமிழ், தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.